**நாகப்பட்டினம் நகராட்சி**

2025– ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை தீர்மான நகல்

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 17.10.2025 | **தனி : –**<br>கடந்த 27.09.2025 தேதி கரூர் வேலுச்சாமி புரத்தில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் நெருசல் ஏற்பட்டு 41 உயிர்கள் பலியானதை தொடர்ந்து உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலும், நிவாரணமும் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசு அனைத்து நிர்வாகத்திற்கும் இம்மன்றம், நன்றியையும், பாராட்டை தெரிவித்துக்கொள்கிறது. நெரிசலில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்களை தெரிவித்து, இரண்டு நிமிடம் மௌன ஆஞ்சலி செலுத்தப்படுகிறது. | தீர்மானம் எண். 191 மன்றத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.** 1<br>நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் அவர்களின் செப்டம்பர் 2025 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் | தீர்மானம் எண். 192 பதிவு செய்யப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.** 2<br>நாகப்பட்டினம் நகராட்சியின் உள் மற்றும் வெளிப்புற பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள் கணினி வரி வசூல் ரசீதுகள் கணினிக்கு தேவையான உபகரணங்கள் ஆகியவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து நகராட்சி பொது நிதியில் தேவைகேற்ப அவ்வப்போது வாங்கி கொள்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.35.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்: 1249/2025/சி2 | தீர்மானம் எண்.193 அ.கு, அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.** 3<br>நாகப்பட்டினம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகன எண். TN–51–AF–6532 ஜெட்ராடிங் வாகனத்திற்கு உரிய பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 — மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்: 2903/2025/இ2 | தீர்மானம் எண்.194 அ.கு, அனுமதிக்கப்பட்டது. |
| 17.10.2025 | **பொருள் எண்.** 4<br>நாகப்பட்டினம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் | தீர்மானம் எண்.195 |

வாகன எண். TN-51-AP-9160 ஜெட்ராடிங் வாகனத்திற்கு உரிய பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் ஆகும் உத்தேச செலவினம் ரூ.32500/ மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு. அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண்: 3153/2025/இ2

17.10.2025

## பொருள் எண். 5

தீர்மானம் எண்.196
அ.கு. அனுமதிக்கப்பட்டது.

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான செல்லூர் பகுதி சர்வே எண்கள்.160/2B2N, 161/1B1A, 160/5, 159/6, 159/2B, 158/4, 158/2B, ஆகிய இடத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் (2024-2025) புதிய பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் மற்றும் உணவகங்கள் கட்டிடங்கள் ரூ.3.040 லட்சத்தில் கட்டப்பட்டு வரப்படுகிறது. குத்தகை இனங்களை முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி (Pre action / Pre-tender) மூலம் முன் வைப்புதொகை பெற்று கட்டிடம் கட்டி முடித்தப்பின் குத்தகைதார்ருக்கு ஒதுக்கீடு செய்திட முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தபுள்ளி 2024-2025 அறிவிப்பினை தினசரி நாளிதழில் பிரசுரம் செய்திட ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.2 லட்சத்திற்கும் மற்றும் கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள முன் வைப்புதொகைக்கும் நகரமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனங்கள் | கடைகள் விவரம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகம் ( கடைகள்) | தரைதளம் கடைகளின் எண்ணிக்கை 80 | தலா ஒரு கடைக்கு முன்வைப்புத்தொகையாக ரூ.3,00,000/- |
| 2 | புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகம் (உணவகங்கள்) | தரைதளம் உணவகங்களின் எண்ணிக்கை 2 | தலா ஒரு உணவத்திற்கு முன்வைப்புத்தொகையாக .10,00,000/- |
| 3 | இருசக்கர வாகன பாதுகாப்பகம் | எண்ணிக்கை -1 | ரூ.5,00,000/- |
| 4 | நான்கு சக்கர வாகன பாதுகாப்பகம் | எண்ணிக்கை -1 | ரூ.5,00,000/- |
| 5 | கட்டண கழிப்பிடம் | எண்ணிக்கை -1 | ரூ.10,00,000/- |
| 6 | பேருந்து நுழைவு கட்டணம் | எண்ணிக்கை - 1 | ரூ.10,00,000/- |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண்: 2613/2024/அ1

17.10.2025

## பொருள் எண்.6

தீர்மானம் எண்.197
அ.கு. அனுமதிக்கப்பட்டது.

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் டெங்கு சிறப்பு பணிகள் 40 தினக்கூலி பணியாளர்களால் உத்தேச மதீப்பீட்டு தொகை ரூ.73.00 இட்சத்தில் கடந்த 01.12.2024 ஆம் தேதி முதல் 30.11.2025 ஆம்

| | | |
|---|---|---|
| | தேதி வரை தொடர்ந்து 1 வருட காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றம் தனது 29.11.2024 ஆம் தேதிய தீர்மான எண் 305 ல் அனுமதி வழங்கியதன் அடிப்படையில் மேற்கண்ட பணி நாளது தேதி வரை சிறப்புடன் நடைப்பெற்று வருகிறது. இந்நிகழ்வுகளில் மேற்கண்ட பணியின் ஒப்பந்த காலம் எதிர்வரும் 30.11.2025 இல் முடிவடைவதால் கடந்த ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தின்படி எதிர்வரும் 01.12.2025 ஆம் தேதி முதல் 30.11.2026–ஆம் தேதி வரை தொடர்ந்து ஓராண்டிற்கு பணிகள் மேற்கொள்ள திரு.கோபாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரரால் கொடுக்கப்பட்டுள்ள சம்மத கடிதத்தினை ஏற்கவும், நகராட்சி பொது நிதியில் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.75.00 இலட்சத்தில் 40 தினக்கூலி பணியாளர்களை கொண்டு டெங்கு சிறப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்: 2973/2024/எச்1 | |
| 17.10.2025 | **பொருள் எண்.7**<br>தமிழ்நாடு அரசு ஆணை (நிலை) 77, நாள்.13.04.2015–இன்படி இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளி கழிப்பறைகளை நகராட்சியின் கல்வி நிதியின் கீழ் 23 தினக்கூலி தூய்மைப்பணியாளர்களால் உத்தேச மதீப்பீட்டு தொகை ரூ 47.00 இட்சத்தில் கடந்த 01.10.2024 ஆம் தேதி முதல் 30.09.2025–ஆம் தேதி வரை தொடர்ந்து 1 வருட காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றம் தனது 30.09.2024–ஆம் தேதிய தீர்மான எண் 250– இல் அனுமதி வழங்கியதன் அடிப்படையில் நாளது தேதி வரை தொடர்புடைய பள்ளிகளில் சிறப்புடன் தூய்மைப்பணிகள் நடைப்பெற்று வருகிறது. இந்நிகழ்வுகளில் மேற்கண்ட பணியின் ஒப்பந்த காலம் எதிர்வரும் 30.09.2025–இல் முடிவடைவதால் கடந்த ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தின்படி எதிர்வரும் 01.10.2025–ஆம் தேதி முதல் 30.09.2026 –ஆம் தேதி வரை தொடர்ந்து ஓராண்டிற்கு அரசு மற்றும் நகராட்சி பள்ளி கழிப்பறைகளில் தூய்மைப்பணிகள் மேற்கொள்ள திரு.ரகுநாதன் ஒப்பந்ததாரரால் கொடுக்கப்பட்டுள்ள சம்மத கடிதத்தினை ஏற்கவும் , நகராட்சி கல்வி நிதியில் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.40.00 இலட்சத்தில் 23 தினக்கூலி தூய்மைப்பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்: 2744/2024/எச்1 | தீர்மானம் எண்.198<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது. |
| 17.10.2025 | **பொருள் எண்.8**<br>நாகப்பட்டினம் நகராட்சியின் பொதுசுகாதாரப்பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் நகர எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் தூய்மைப்பணிகள் நடைபெற்று வருகிறது. அவ்வாறு தூய்மைப்பணிகள் மேற்கொள்வதற்கு நடப்பு நிதி ஆண்டிற்கு (2025–2026 ஆம் நிதி ஆண்டு) தேவையான பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு , விளம்பரக்கட்டணம் மற்றும் இதர தளவாடப்பொருட்கள் ரூ.20.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையில் தருவித்து கொள்வதற்கும், உத்தேச செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.199<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>ந.க.எண்: 3641/2025/எச்1</td><td></td></tr>
<tr><td>17.10.2025</td><td>பொருள் எண்.9<br>நாகப்பட்டினம் நகர எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் சுற்றிதிரியும் தெருநாய்களை பிடித்து, கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய் தடுப்பூசி போடுதல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.163 நாள்.28.06.2024 அனுமதி பெறப்பட்டுள்ளது. விலங்குகள் நலவாரிய விதிமுறைகள் மற்றும் நகராட்சி விதிமுறைகளுக்குட்பட்டு கருத்தடை(ABC) வெறிநாய் தடுப்பூசி போடுதல் பணிகள் செய்வதற்கு கடந்த 05.06.2025 ஆம் தேதியன்று தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதில் அரசாணை எண். G.O. (4D) No 1 நாள்.17.03.2025 ன் படி ஒரு நாய்க்கு ரூ.1640/-வீதம் கட்டண விகிதத்தில் கருத்தடை செய்வதற்கு சம்மதம் தெரிவித்து தொடர்புடைய M/S Pet Care Foundation, Chennai என்ற தனியார் நிறுவனத்தாரால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>தீர்மானம் எண்.200<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது.<br>.<br>.</td></tr>
<tr><td></td><td>அலுவலககுறிப்பு | 1 | பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு தொடர்புடைய M/S Pet Care Foundation, Chennai என்ற தனியார் நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்</td><td></td></tr>
<tr><td></td><td>ந.க.எண்: 5312/2012/எச்1</td><td></td></tr>
<tr><td>17.10.2025</td><td>பொருள் எண்.10<br>நாகூர் ஆண்டவர் கந்தூரி திருவிழா எதிர்வரும் 21.11.2025ஆம் தேதி முதல் 04.12.2025ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதால், படிவம்1 அறிக்கையின்படி பொதுசுகாதாரப்பணியின் கீழ் சிறப்பு தூய்மைப்பணிகள் மேற்கொள்வதற்கு ,தேவையான கிருமிநாசினிகள் மருந்துகள் எரிப்பொருள்கள், ஒப்பந்த அடிப்படையில் வாடகை டிராக்டர் மற்றும் தளவாடபொருட்கள் தருவித்து கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.1715/2025/டி1, நாள்:14.07.2025-இல் நிர்ணயம் செய்துள்ளபடி, நாள் ஒன்றுக்கு ஒரு தினக்கூலி பணியாளருக்கு ரூ.600 வீதம் ஊதியம் வழங்கி திருவிழா ந டைபெறும் நாட்களுக்கு தற்காலிகமாக 100 தூய்மைப்பணியாட்களை பணி அமர்த்திக்கொள்வதற்கும் உத்தேசசெலவினத்தொகை ரூ.25.50 இலட்சத்தை, நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்வதற்கும், படிவம்-1 அறிக்கையினை இயக்குநர், பொதுசுகாதாரம் நோய்தடுப்புதுறை சென்னை அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்: 3700/2025/எச்1</td><td>தீர்மானம் எண்.201<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது.<br>.</td></tr>
<tr><td>17.10.2025</td><td>பொருள் எண்.11<br>நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட காடம்பாடி முதல் செல்லூர் சுடுகாடு வரையிலான மழைநீர் வடிகால் ( Major Channel) மற்றும் செல்லூர் சுடுகாடு முதல் நல்லியான்தோட்டம் ரயில்வேகேட் வரையில் உள்ள பகுதிகளில் வடிகாலிலுள்ள குப்பைக் கழிவுகளை அகற்றி, மழைக்காலங்களில் பொதுமக்களுக்கும் பொதுசுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்க கூடிய வகையில் உள்ள கழிவுநீர் மற்றும் குப்பைக்கழிவுகள்</td><td>தீர்மானம் எண்.202<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

தேங்காமல் JCB இயந்திரம் கொண்டு பொதுநிதியில் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 10.09.2025 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெறப்பட்டதன் விவரம் பின்வருமாறு;

| **வ.எ** | **ஒப்பந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்)** | **பணியின் விவரம்** | **மதிப்பீட்டு விலை விகிதம்** |
|---|---|---|---|
| 1. | பி.சிவசக்தி, ஒப்பந்தக்காரர், நாகப்பட்டினம் – 611001. | நாகப்பட்டினம் நகர எல்லைக்குட்பட்ட மழைநீர் வடிகால் பகுதிகளில் மழைக்காலங்களில் தேங்கியுள்ள கழிவுநீர் மற்றும் குப்பைக் கழிவுகளை JCB இயந்திரம் கொண்டு அகற்றும் பணிகள் மேற்கொள்ளுதல் | JCB Work/Hour Rs.1000/- |
| 2. | எஸ்.சத்தியநாராயணன், ஒப்பந்தக்காரர், நாகப்பட்டினம் – 611001 | | JCB Work/Hour Rs.1100/- |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1இல் கண்டுள்ள திரு. பி.சிவசக்தி, ஒப்பந்தக்காரர் ரூ.1000/–என கொடுக்கப்பட்டுள்ள விலைவிகித்தை ஏற்கலாம். மேலும் பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகரமன்றத் தலைவரின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகரமன்றத் தலைவரின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |

ந.க.எண்1346/2025/எச்1

17.10.2025

## பொருள் எண்.12

தீர்மானம் எண்.203

அ.கு, அனுமதிக்கப்பட்டது.

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நீர்நிலைகள் , கழிவுநீர் வாய்க்கால்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்களில் பொதுமக்களுக்கும் பொதுசுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்க கூடிய வகையில் உள்ள சீமைக்கருவேலை மரங்களை (வேலிக்கருவேலைகள்,முள்/மரம்) JCB இயந்திரம் கொண்டு பொதுநிதியில் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு இன்று 10.09.2025 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெறப்பட்டதன் விவரம் பின்வருமாறு;

| வ.எ | ஒப்பந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | பணியின் விவரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | பி.சிவசக்தி, ஒப்பந்தக்காரர், நாகப்பட்டினம் – 611001. | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நீர்நிலைகள் , கழிவுநீர் வாய்க்கால்கள் மற்றும் | Tractor work/Day Rs.2500<br>JCB Work/Hour Rs.1000/- |

| | | | |
|---|---|---|---|
| 2. | எஸ்.சத்தியநாராயணன், ஒப்பந்தக்காரர், நாகப்பட்டினம் – 611001 | அரசுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சீமைக்கருவேலை மரங்களை JCB இயந்திரம் கொண்டு அகற்றும் பணிகள் மேற்கொள்ளுதல் | Tractor work/Day Rs.2600<br>JCB Work/Hour Rs.1100/- |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1இல் கண்டுள்ள திரு. பி.சிவசக்தி, ஒப்பந்தக்காரர் ரூ.1000 + ரூ.2500/– ஆக கூடுதல் ரூ.3500 என கொடுக்கப்பட்டுள்ள விலைவிகித்தை ஏற்கலாம். மேலும் பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகரமன்றத் தலைவரின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழுங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது

| அலுவலக குறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதிக்கலாம் |
| | 2 | பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகரமன்றத் தலைவரின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் |

ந.க._எண்,1732/2025/எச்1

17.10.2025

## பொருள் எண்.13

நாகப்பட்டினம் நகராட்சியில் பிறப்பு, இறப்பு பதிவுகள் தினந்தோறும் இணையதளத்தில் அவ்வப்போது பதிவேற்றம் செய்வதற்கு முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் தகுதி வாய்ந்த தட்டச்சர், புள்ளி விவரக்குறிப்பாளர் மற்றும் தினக்கூலி பணியாளர்களால் பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.70 இலட்சத்திற்கு இன்று 30.09.2025 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெறப்பட்டதன் விவரம் பின்வருமாறு

| வ. எ | ஒப்பந்தக்காரரின்பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | பணியின்விவரம் | மதிப்பீட்டுவிலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு. பி. ரகுநாதன், ஒப்பந்தக்காரர், நாகப்பட்டினம் 611001. | பிறப்பு, இறப்பு பதிவுகள் மற்றும் இதர இணையதள பணிகள் தினந்தோறும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் தகுதி வாய்ந்த தினக்கூலி புள்ளி விவரக்குறிப்பாளர், தட்டச்சர் மற்றும் இதர தினக்கூலி பணியாளர்களால் பணிகள் மேற்கொள்ளும் பணி | 1.ரூ.740/–(Skilled Worker per Head)<br>2.ரூ.600/– (Temporary Work Per Head) |
| 2 | கே.கோபாலகிருஷ்ண ஒப்பந்தக்காரர், நாகப்பட்டினம் –6110 | | 1.ரூ.725/–(Skilled Worker per Head)<br>2.ரூ.590/– (Temporary Worker Per Head) |

மேற்கண்ட விபரப்படிவரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள திரு. பி. ரகுநாதன், ஒப்பந்தக்காரர் ரூ.740+600 ஆக கூடுதல்ரூ. 1340/– என மாவட்டஆட்சித்தலைவரின், விலை விகிதத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளதை ஏற்கலாம். மேலும் பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகரமன்றத்தலைவரின்அனுமதி பெற்று விநியோக ஆணை

தீர்மானம் எண்.204
அ.கு,
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | |
| | அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகரமன்றத் தலைவரின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| | ந.க.எண்: 2846/2025/பி1 | |
| 17.10.2025 | **பொருள் எண்.14**<br>நாகப்பட்டினம் நகராட்சியின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2025–26ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் /தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகப்பட்டினம் அவர்களின்கடிதம் ந.க.எண் 268/2025/சி6 நாள் 19.09.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 09.10.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதன் விவரம் பின்வருமாறு. | தீர்மானம் எண்.205<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |

| *வ. எண்* | *பணியின் பெயர்* | *மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில்* | *ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்)* | *மதிப்பீட்டு விலை விகிதம்* | |
|---|---|---|---|---|---|
| | | | | *குறைவு* | *அதிகம்* |
| 1. | நாகப்பட்டினம் நகராட்சி நாகூர் திருமலையப்பன் சந்தில் பேவர் பிளாக் அமைக்கும் பணி | 8.00 | *திரு.பி. சிவசக்தி, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | – | 1.20 |
| | | | *திரு.கே. கோபாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | 0.01 | – |
| 2 | நாகப்பட்டினம் நகராட்சி, வார்டு எண் 20 சலவையர் குளத்தில் (வண்ணான்குளம்) படித்துறை அமைக்கும் பணி | 8.00 | *திரு. தேவராஜ் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | – | 1.69 |
| | | | *திரு.கே. கோபாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | 0.01 | – |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | குறைவு | அதிகம் |
|---|---|---|---|---|---|
| 3 | நாகப்பட்டினம் நகராட்சி தம்பிதுரை பூங்கா மணிக்கூண்டில் விளக்குகள் அமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் | 2.00 | *மெசர்ஸ் பகவதி ஏஜென்சீஸ் நாகப்பட்டினம்* | 0.01 | - |
| | | | *மெசர்ஸ் பவித்ரா அன்ட் கோ,நாகப்பட்டினம்* | - | 1.13 |

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். |
|---|---|---|

ந.க.எண்:2999/2025/இ1

17.10.2025

**பொருள் எண்.15**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் தர்காவில் நடைபெறவுள்ள கந்தூரி திருவிழா 2025 னை முன்னிட்டு முன்னேற்பாடு நடவடிக்கை பணிகள் மேற்கொள்வதற்கு 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (Tied and Untied Grant) - 2024-25 மற்றும் 2025-26ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின்கடிதம் ந.க.எண் 34768/2025/இஏ2 நாள் 29.09.2025 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 707/2025/இ1 நாள் 30.09.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 10.10.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதன் விவரம் பின்வருமாறு.

| *வ. எண்* | *பணியின் பெயர்* | *மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில்* | *ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்)* | *மதிப்பீட்டு விலை விகிதம்* | |
|---|---|---|---|---|---|
| | | | | *குறைவு* | *அதிகம்* |
| 1. | Providing Paver block Arrangement at Dargah Market Lane,Alangara Vasal,New Bazzar Lane,Dharga Kulam South Bank,Dharga Kulam Keelkarai,Dharga Kulam North Bank,Dharga Kulam | 125.00 | *திரு.ஜே. ஜேசு, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | 0.01 | - |
| | | | *திரு.ஆர். ராஜேந்திரன் ஒப்பந்ததாரர், ஆயக்காரன்புலம் , நாகப்பட்டினம் மாவட்டம்* | - | 0.95 |

தீர்மானம் எண்.206
அ.கு, பதிவுசெய்யப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | melkarai and Thalaimattu Street in Nagore, Nagapattinam Municipality. | | | | |
| 2 | Providing Storm Water Drain and CC Pavement at Yusuf Nainar Street and Noolkadai Street in Nagore, Nagapattinam municipality | 63.00 | *திரு. எஸ். கருணாநிதி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | 0.01 | – |
| | | | *திரு.கே. கோபாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | – | 0.63 |
| 3 | Providing Storm Water Drain at Dharga Market Keel Lane, New Bazzar Lane ,Dharga kulam North Bank and Moideen Palli 1st Lane in Nagore ,Nagapattinam municipality | 40.00 | *திரு.ஜே. ஜேசு, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | 0.03 | – |
| | | | *திரு.ஆர். ராஜேந்திரன் ஒப்பந்ததாரர், ஆயக்காரன்புலம், நாகப்பட்டினம் மாவட்டம்* | – | 1.49 |
| 4 | Paving the floor with Anti- skid tiles at Dargah kulam foot path in Nagapattinam Municipality | 15.00 | *திரு. எஸ். சத்யநாராயணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | 0.05 | – |
| | | | *திரு.கே. கோபாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | – | 1.75 |

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |

ந.க.எண்:3238/2025/இ1

17.10.2025

**பொருள் எண்.16**

தீர்மானம் எண்.207

| | நாகப்பட்டினம் நகராட்சியில் பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் பாதாள க்கடை நிதி 2025-26ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு 09.10.2025 ல் ப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் ன்வருமாறு, | அ.கு, அனுமதிக்கப்பட்டது. |
|---|---|---|

| வ எண் | பணியின் விவரம் | *மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில்* | *ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்)* | *மதிப்பீட்டு விலை விகிதம்* | |
|---|---|---|---|---|---|
| | | | | *குறைவு* | *அதிகம்* |
| 1. | பாதாளசாக்கடை திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் நீரேற்று நிலையங்களில் மோட்டார் இயக்குவதற்கும் மற்றும் பாதாள சாக்கடை பணிகளை மேற்பார்வையிடுவதற்கும் Pump Operator மற்றும் Supervisor பணியாட்களை வெளிக்கொணர்வு பணியாளர்கள் மூலம் 20 தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள விநியோகம் செய்யும் பணி | 24.60 | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | - | 2.55 |
| | | | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | *மதிப்பீட்டு விலை விகிதம்* | - |
| 2 | குடிநீர் விநியோக நீரேற்று நிலையங்களில் மோட்டார் இயக்குவதற்கும் மற்றும் குடிநீர் பணிகளை மேற்பார்வையிடுவதற்கும் Pump Operator மற்றும் Supervisor, Technical Assistant பணியாட்களை வெளிக்கொணர் | 23.10 | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | *மதிப்பீட்டு விலை விகிதம்* | - |
| | | | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | - | 1.91 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வு பணியாளர்கள் மூலம் 19 தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள விநியோகம் செய்யும் பணி | | | | |
| 3 | சாலமன் பூங்கா நீரேற்று நிலையம், வெளிப்பாளையம் நீரேற்று நிலையத்தில் மோட்டார் இயக்குவதற்கும் மற்றும் குடிநீர் விநியோக வாகனம் மற்றும் பாதாள சாக்கடை கழிவுநீர் வாகனங்களுக்கு உரிய துலக்குனர்(Cleaner)களை வெளிக்கொணர்வு பணியாளர்கள் மூலம் 21 தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள விநியோகம் செய்யும் பணி | 25.50 | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | ***மதிப்பீட்டு விலை விகிதம்*** | – |
| | | | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 1.70 |
| 4 | நாகப்பட்டினம் மேலக்கோட்டை வாசலில் அமைந்துள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குதல் பணிகளை மேற்கொள்வதற்கு | 11.00 | எஸ்.சத்யநாராயணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | ***மதிப்பீட்டு விலை விகிதம்*** | – |
| | | | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட் | – | 2.10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வெளிக்கொணர்வு பணியாளர்கள் மூலம் தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள விநியோகம் செய்யும் பணி | | டினம் | | |

மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டு விலை விகிதத்திலேயே ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. .

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டு விலை விகிதத்திலே ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அனுமதி வழங்கலாம் |
| | 3 | மேற்காணும் பணிகளுக்கு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண். 147/2025/இ1

17.10.2025

**பொருள் எண்.17**

வருகின்ற வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களால் 17.09.2025 அன்று முன்அனுமதி வழங்கப்பட்டதனைத்தொடர்ந்து கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு 09.10.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ எ ண் | பணியின் விவரம் | *மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில்* | *ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்)* | *மதிப்பீட்டு விலை விகிதம்* | |
|---|---|---|---|---|---|
| | | | | *குறைவு* | *அதிகம்* |
| 1. | வார்டு 1 முதல் வார்டு 12 வரை உள்ள மழைநீர் கால்வாய்கள் மற்றும் வடிகால்கால்களில் மழைநீர் தேங்காமல் வெளியேற்றுவதற்கு உரிய வகையில் JCB மற்றும் Hitachi | 5.00 | மெசர்ஸ் டெல்டா இன்ஜினியரிங் சர்வீசஸ் நாகப்பட்டினம் | 0.02 | – |
| | | | எஸ். கருணாநிதி, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 0.75 |

தீர்மானம் எண். 208
அ.கு, அனுமதிக்கப்பட்டது
.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இயந்திரங்களை கொண்டு தூர்வாரும் பணி | | | | |
| 2 | வார்டு 13 முதல் வார்டு 24 வரை உள்ள மழைநீர் கால்வாய்கள் மற்றும் வடிகால்கால்களில் மழைநீர் தேங்காமல் வெளியேற்றுவதற்கு உரிய வகையில் JCB மற்றும் Hitachi இயந்திரங்களை கொண்டு தூர்வாரும் பணி | 5.00 | கே.கோபால கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.02 | – |
| | | | எஸ். கருணாநிதி, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 0.75 |
| 3 | வார்டு 25 முதல் வார்டு 36 வரை உள்ள மழைநீர் கால்வாய்கள் மற்றும் வடிகால்கால்களில் மழைநீர் தேங்காமல் வெளியேற்றுவதற்கு உரிய வகையில் JCB மற்றும் Hitachi இயந்திரங்களை கொண்டு தூர்வாரும் பணி | 5.00 | மெசர்ஸ் டெல்டா இன்ஜினியரிங் சர்வீசஸ் நாகப்பட்டினம் | 0.02 | – |
| | | | எஸ். கருணாநிதி, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 0.75 |
| 4 | வார்டு எண் 1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஆயில் இன்ஜின் கொண்டு வெளியேற்றுதல் பணி. | 2.50 | எஸ்.சத்யநாராயணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 1.05 |
| | | | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.04 | – |
| 5 | இயற்கை இடர்பாடு காலங்களுக்கு தேவையான மண்மூட்டைகள் மற்றும் இதர | 2.50 | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.02 | – |
| | | | எஸ்.சத்யநாராயணன்ஒப் | – | 1.49 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் செய்தல் பணி. | | பந்ததாரர், நாகப்பட்டினம் | | |
| 6 | வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சியின் பராமரிப்பில் உள்ள ஜெனரேட்டர்களை பராமரித்தல் மற்றும் வாடகைக்கு அமர்த்துதல் | 5.00 | கே.கோபால கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.04 | – |
| | | | பி.ரகுநாதன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 0.50 |
| 7 | வார்டு எண் 14ல் உள்ள புதிய நம்பியார் நகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் கால்வாய் (Major canal)தூர்வாரும் பணி | 2.00 | எஸ். கருணாநிதி, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.01 | – |
| | | | மெசர்ஸ் டெல்டா இன்ஜினியரிங் சர்வீசஸ் நாகப்பட்டினம் | – | 1.15 |
| 8 | வார்டு எண் 1 முதல் 36 வரை உள்ள சாலை குறுகிய தெருக்களில் மினி ஹிட்டாச்சி மூலம் கால்வாய்களை தூர்வாரும் பணி | 5.00 | எஸ்.சத்யநாராயணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.01 | – |
| | | | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 1.20 |

மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு உடன் பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தி ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அனுமதி |

| | | |
|---|---|---|
| | வழங்கலாம். | |
| 3 | மேற்காணும் பணிகளுக்கு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |

ந.க.எண். 2103/2023/இ1

17.10.2025

**பொருள் எண்.18**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (Tied Grant) – 2024-25ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின்கடிதம் ந.க.எண் 37751/2025/இஏ2 நாள் 11.08.2025ல் அனுமதி வழங்கப்பட்டதனைத்தொடர்ந்து 29.09.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11ல் சாமந்தான்பேட்டை பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 12.50 | *எஸ். கருணாநிதி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | 0.01 | – |
| | | | *கே. கோபாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | – | 0.53 |
| 2 | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11ல் சாமந்தான்பேட்டை பகுதியில் சிறுபாலம் அமைக்கும் பணி | 14.00 | *என். செந்தில்குமார் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | 0.01 | – |
| | | | *மெசர்ஸ் அமரா கன்ஸ்ட்ரக்ஷன், நாகப்பட்டினம்* | – | 0.84 |
| 3 | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்ப | 7.00 | *எஸ். சத்யநாராயண* | 0.01 | – |

தீர்மானம் எண். 209
அ.கு, பதிவுசெய்யப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ட்ட வார்டு எண் 11ல் சாமந்தான்பேட்டை பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | | *ன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | | |
| | | | *பி.சிவசக்தி, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | – | 0.46 |
| 4 | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23, வடக்கு நல்லியான்தோட்டம் மற்றும் தெற்கு நல்லியான் தோட்டம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி (SWD with covering slab) | 40.50 | *கே. கோபாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | 0.02 | – |
| | | | *பி.சிவசக்தி, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்* | – | 0.52 |

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |
|---|---|---|

ந.க.எண்: 2805/2025/இ1

17.10.2025

**பொருள் எண்.19**

நாகப்பட்டினம் நகராட்சி, நாகூர் பகுதியிலுள்ள வார்டு எண்.9 சம்பா தோட்டம் சர்வே எண்.2395/16ல் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினால் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு இந்நகராட்சியால் A பிளாக் முதல் H பிளாக் வரை ஒரு பிளாக்கிற்கு ஒரு வரிவிதிப்பு வீதிம் 10 எண்ணிக்கையிலான வரிவிதிப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டு பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலகம் திருச்சிக்கு கேட்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி 320 வீடுகளுக்கு சொத்துவரி தொகை தனித்தனியாக நிர்ணயம் செய்து கேட்பு அனுப்பி வைக்கும்படி மேற்படி அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து புதியதாக மேற்கண்ட குடியிருப்பு கட்டிடங்களுக்கு தனித்தனியாக 320 வரிவிதிப்புகள் நிர்ணயம் செய்ய ஏதுவாக ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட கீழ்கண்ட 10 சொத்துவரி விதிப்புகளையும் மற்றும் கேட்பு தொகையினையும் நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வரிவிதிப்பு எண்.** | **வரிவிதிப்பாளர் பெயர்** | **நீக்கம் செய்யப்பட வேண்டிய வருடம்** | **நீக்கம் செய்யப்படவேண்டிய கேட்பு தொகை** |
|---|---|---|---|---|

தீர்மானம் எண். 210
அ.கு,
அனுமதிக்கப்பட்டது
.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | **(2022 – 2023 முதல் 2025–2026 வரை)** |
| 1 | 098/009/900 676 | பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி | 2022–2023 முதல் 2025 –2026 வரை | ரூ.3,31,028 x 4 =13.24.112/– |
| 2 | 098/009/900 677 | பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி | 2022–2023 முதல் 2025 –2026 வரை | ரூ.3,31,028 x 4 =13.24.112/– |
| 3 | 098/009/900 678 | பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி | 2022–2023 முதல் 2025 –2026 வரை | ரூ.3,31,028 x 4 =13.24.112/– |
| 4 | 098/009/900 679 | பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி | 2022–2023 முதல் 2025 –2026 வரை | ரூ.3,31,028 x 4 =13.24.112/– |
| 5 | 098/009/900 680 | பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி | 2022–2023 முதல் 2025 –2026 வரை | ரூ.3,31,028 x 4 =13.24.112/– |
| 6 | 098/009/900 681 | பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி | 2022–2023 முதல் 2025 –2026 வரை | ரூ.3,31,028 x 4 =13.24.112/– |
| 7 | 098/009/900 682 | பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு | 2022–2023 முதல் 2025 –2026 வரை | ரூ.3,31,028 x 4 =13.24.112/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாரியம் திருச்சி | | |
| 8 | 098/009/900 683 | பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி | 2022-2023 முதல் 2025 -2026 வரை | ரூ.3,31,028 x 4 =13.24.112/- |
| 9 | 098/009/900 684 | பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி | 2022-2023 முதல் 2025 -2026 வரை | ரூ.3,31,028 x 4 =13.24.112/- |
| 10 | 098/009/900 685 | பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி | 2022-2023 முதல் 2025 -2026 வரை | ரூ.3,31,028 x 4 =13.24.112/- |
| | மொத்தம் சொத்துவரி தொகை | | | 1,32,41,120/- |

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண்: 1428/2024/அ1

17.10.2025

## பொருள் எண்.20

நாகப்பட்டினம் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1 முதல் 36 வார்டுகளிலும் வாகனங்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்களை கொண்டு குப்பை கழிவுகனை சேகரம் செய்யும் பணியினை உத்தேச மதீப்பீட்டு தொகை ரூ.660.21 இட்சத்தில் கடந்த 01.12.2024 ஆம் தேதி முதல் 30.11.2025 ஆம் தேதி வரை தொடர்ந்து 1 வருட காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றம் தனது 29.11.2024 ஆம் தேதிய
தீர்மான எண் 307 இல் அனுமதி வழங்கியதன் அடிப்படையில் மேற்கண்ட பணி நாளத தேதி வரை நடைபெற்று வருகிறது. இந்நிகழ்வுகளில் மேற்கண்ட பணியின் ஒப்பந்த காலம் எதிர்வரும் 30.11.2025 இல் முடிவடைவதால் கடந்த ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தில் 10% உயர்த்தி வழங்கவும் எதிர்வரும் 01.12.2025 ஆம் தேதி முதல் 30.11.2026-ஆம் தேதி வரை தொடர்ந்து ஓராண்டிற்கு பணிகள் மேற்கொள்ள M/s Southern Solid Waste Management Service. Kanyakumari என்ற தனியார் நிறுவனத்தரால் கொடுக்கப்பட்டுள்ள சம்மத கடிதத்தினை ஏற்று பணி ஆணை வழங்கவும் , நகராட்சி பொது நிதியில் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.726.5 இலட்சத்தில் ஓராண்டிற்கு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

தீர்மானம் எண்.211
அ.கு, அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | ந.க.எண்: 264/2023/எச்1 | |
| 17.10.2025 | **பொருள் எண்.21**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் பணியினை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி 2020–21ன் கீழ் சிப்பம் –1ல் ரூ.210.00 இலட்ச மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனைத்தொடர்ந்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி முழுமையாக முடிவுற்றுள்ளது. மேலும் சாலை மேம்படுத்தும் பணியில் உபபொருட்களின் விலை ஏற்றத்தினால் மதிப்பீட்டைவிட ரூ.529167.00 கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட தொகையை நகராட்சி பொதுநிதியின் கீழ் ஒப்பந்ததாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்: 1002 /2020/இ1 | தீர்மானம் எண்.212<br>அ.கு,<br>அனுமதிக்கப்ப்பட்ட<br>து |
| 17.10.2025 | **பொருள் எண்.22**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 மறைமலைநகர் பகுதியில் உள்ள சுற்றுச்சுவர் சேதமடைந்து பொதுமக்களுக்கு இடையூராக இருப்பதாலும் மற்றும் சுற்றுசுவர் அருகே இரயில்வே தண்டவாளம் உள்ளதாலும் பொதுமக்களின் நலன் கருதி சுற்றுச்சுவர் மேம்பாடு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 — மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு வருவாய் நிதி அல்லது அரசின் ஏதேனும் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க. எண். 147 /2025/இ1 | தீர்மானம் எண்.213<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்ட<br>து |
| 17.10.2025 | **பொருள் எண்.23**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான புதிய கடற்கரை பகுதியில் புதியதாக ஒரு எண்ணிக்கையில் சிறியரக உயர்மின் கோபுரவிளக்கு மற்றும் 3 எண்ணிக்கையிலான தெரு மின்விளக்குகள் அமைக்கவும் அதற்குரிய கேபிள் விநியோகம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.214<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்ட<br>து |

| | | |
|---|---|---|
| | 2 மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு வருவாய் நிதி அல்லது அரசின் ஏதேனும் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | ந.க. எண். 147 /2025/இ1 | |
| 17.10.2025 | **பொருள் எண்.24**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15ல் உள்ள இளஞ்சேரன் நகர் சந்து மற்றும் பிள்ளையார் கோவில் தெரு முதல் SSM நகர் இணைக்கும் சாலையானது மிகவும் சேதமடைந்து பொதுமக்களுக்கு இடையூராக இருப்பதால் புதியதாக பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு வருவாய் நிதி அல்லது அரசின்<br>ந.க. எண். 147 /2025/இ1 | தீர்மானம் எண்.215<br>அ.கு. அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.25**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 29ல் உள்ள தேரடித்தெருவில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் சரிவர செல்லாத காரணத்தினால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக இருப்பதால் புதியதாக 2 எண்ணிக்கையில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க. எண். 147 /2025/இ1 | தீர்மானம் எண்.216<br>அ.கு. அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.26**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4ல் உள்ள மேலப்பட்டினச்சேரியில் சிமெண்ட் சாலை சேதமடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளதால் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1 மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.217<br>அ.கு. அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2 மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு வருவாய் நிதி அல்லது அரசின் ஏதேனும் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க. எண். 147 /2025/இ1 | |
| 17.10.2025 | **பொருள் எண்.27**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21ல் உள்ள தாமரைகுளம் மேல்கரை பகுதியில் மழைநீர் வடிகால் சேதமடைந்து வீடுகளுக்குள் புகுவதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாலும் மற்றும் பொதுசுகாதார கேடு விளைவிப்பதாலும் மேற்படி பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்குமாறு நகர்மன்ற தலைவரின் அறிவுறுத்தலின்படி மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணியினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க. எண். 147 /2025/இ1 | தீர்மானம் எண்.218<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.28**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13ல் உள்ள தெற்கு பால்பண்ணைச்சேரி பகுதியில் 150m நீளத்திற்கு மின்வழித்தடங்கள் அமைத்திடவும் மற்றும் வார்டு எண். 4ல் உள்ள காட்டுப்பள்ளி குளத்தெரு, மேலப்பட்டிணச்சேரி பகுதியில் புதியதாக மூன்று எண்ணிக்கையில் தெரு மின்விளக்குடன் கூடிய மின்கம்பங்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்கண்ட பணியினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந க. எண். 147 /2025/இ1 | தீர்மானம் எண்.219<br>அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.29**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7ல் உள்ள வண்டிப்பேட்டை குடிநீர் நீர்தேக்க தொட்டி முதல் மாப்பிள்ளை தெரு வரை சிமெண்ட் சாலை சேதமடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக இருப்பதால் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | தீர்மானம் எண்.220<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு வருவாய் நிதி அல்லது அரசின் ஏதேனும் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும்<br>ந.க. எண். 147 /2025/இ1 | |
| 17.10.2025 | **பொருள் எண்.30**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி. S. பதுருநிஷா அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>2–வது வார்டுக்குட்பட்ட நாகூர் கந்தூரி திருவிழாவை முன்னிட்டு யானைக்கட்டி முடுக்கு கழிவறை அமைந்திருக்கும் இடத்தில் கந்தூரிக்கு டுவீலர் பார்க்கிங் வசதி செய்து தரவும், அங்கு இருக்கும் இரண்டு சந்து பாதையில் சாலையின் குறுக்கே தடுப்பனையாக நான்கு சில்வர் குழாய் கம்பம் அமைத்து தரவும், இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன் | தீர்மானம் எண்.221<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.31**<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு. எச்.முஹம்மது ஷேக்தாவூது அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ 3–வது வார்டுக்குட்பட்ட மெய்தீன்பள்ளித்தெரு, புதுத்தெரு, செம்மரைக்கடைத்தெரு சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளது மேற்படி சாலையை புதிதாக அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.222<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.32**<br>**நகர்மன்றஉறுப்பினர் திருமதி.எம்.ஜீலைகாபிவி அவர்களால் கொண்டு வரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ 14–வது வார்டுக்குட்பட்ட புதிய நம்பியார்நகர் ஆர்ச் அருகாமையில் உள்ள தெரு பகுதி மிகவும் தாழ்வாக உள்ளதால் மழைநீர் சுழ்ந்து அவ்வழியாக செல்வோர்களுள வசிப்பவர்களும் மிகவும் அவதிப்பட்டு வருகிறார்கள். ஆகையால் அத்தெருவின் சாலையை உயர்த்தியும் அகலபடுத்தியும் சிமெண்ட் சாலையாக அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.223<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 17.10.2025 | **பொருள் எண்.33**<br>**. நகர்மன்றஉறுப்பினர் திருமதி.கு. ஜோதிலெட்சுமி அவர்களால் கொண்டு வரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ 15–வது வார்டுக்குட்பட்ட செபஸ்தியார் கோவில் பகுதி பாதாளசாக்கடை திட்டம் அமுல் படுத்திய பிறகு இதுவரை சாலை பணி மேற்கொள்ளவில்லை, அச்சாலையை விரைந்து அமைத்துதரவும்,<br>➢ இளஞ்சேரன் நகர் பகுதியில் மழைநீர் குளம் போல் தேங்கி நிற்கிறது, அந்த இடத்தில் பேவர் பிளாக் சாலை அமைத்து தரவும்,<br>➢ பிள்ளையார் கோவில் தெருவில் SSM நகரிலிருந்து பிள்ளையார் கோவில் தெருவை இணைக்கும் பகுதியில் பேவர் பிளாக் அமைத்து தரவும்,<br>➢ RVG நகர் பூங்கா மற்றும் SSM நகர் பூங்கா ஆகிய இரண்டு பூங்காகளும் மிகவும் பழுதடைந்துள்ளது, அதனை செப்பனிட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும்,<br>➢ மேட்டுபங்களா மற்றும் நெய்தல் நகர் பகுதியில் பாதாளசாக்கடை அமைத்து தரவும் இத்தீர்மாணம் மூலம் கேட்டுக்கொள்கிறேன் | தீர்மானம் எண்.224<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.34**<br>**நகர்மன்றஉறுப்பினர் திருமதி.சு. சுபஸ்ரீ அவர்களால் கொண்டு வரப்படும் கோரிக்கை**<br>**மனு –**<br>➢ 18–வது வார்டுக்குட்பட்ட இராமநாயக்கண் குளத்தெரு, நாடார் தெரு ஆகிய தெருக்களின் கடைசி பகுதியில் சிறுபாலம் பழுதாகியுள்ளது. அவைகளை பெரிய சிமெண்ட் பைப் பாலமாக அமைத்துதரவும்,<br>➢ காரியங்குடிசெட்டிதெரு, இராமநாயக்கண்குளத்தெரு ஆகிய தெருக்களில் புதிய தார்சாலை அமைத்து பல மாதங்களாகியும், பாதாளசாக்கடை கால்வாய் மேன்ஹோல் சாலை மட்டத்திற்கு அமைக்கவில்லை. இதனால் மேற்படி சாலை பழுதாகியுள்ளது எனவே அதனை சரிசெய்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.225<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 17.10.2025 | **பொருள் எண்.35**<br>**நகர்மன்றஉறுப்பினர் திரு.எஸ்.முகம்மது நத்தர் கொண்டு வரப்படும் கோரிக்கை**<br>**மனு –**<br>➢ 26–வது வார்டுக்குட்பட்ட கொட்டுப்பாளையத்தெரு வழியாக செட்டிப்பல்லாக்கு ஊர்வலம், கொடி ஊர்வலம் மற்றும் சந்தனக்கூடு ஊர்வலம் நடைபெற இருப்பதால் கொட்டுப்பாளையத்தெரு, குண்டும் குழியுமாக இருக்கும் காரணத்தினால் அச்சாலை புதிய சாலையாக அமைத்து தரவும்,<br>➢ கொட்டுபாளையத்தெருவில் சாக்கடை முழுவதும் பழுதடைந்துள்ளது சாக்கடையை முழுமையாக புதிதாக அமைத்து தரவும், சாலை அமைக்கும் முன்பாக சாக்கடையை சரிசெய்து பின் சாலை அமைக்கவும் கேட்டுகொள்கிறேன்.<br>➢ சுப்பையாபிள்ளை சந்து, ராமர்மடசந்து, கடசல்காரத்தெரு, கல்லுக்காரத்தெரு, கிணத்தடிசந்து , காத்தான்செட்டித்தெரு ஆகிய தெருக்களில் புதிய குடிநீர் பைப்பிற்காக தோண்டப்பட்டுள்ளதால் சாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளது. எனவே இத்தெருக்களில் உள்ள சாலைகளை புதிதாக அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.226<br>அ.கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.36**<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.ஆர்.எ.டி.அண்ணாதுரை அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு–**<br>➢ 34–வது வார்டுக்குட்பட்ட சம்பட்டிபிள்ளையார் கோவில் சன்னதி தெருவில் பேவர் பிளாக் அமைத்து தரவும்<br>➢ கீரைக்கொல்லைத்தெரு 3வது தெரு, டிச்சர்ஸ் காலனிக்கு பேவர் பிளாக் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.227<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.37**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7ல் உள்ள நாகப்பட்டினம் நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024–25ன் கீழ் நாகப்பட்டினம் செல்லூர் கிராமத்தில் புல எண் 160/2B2N, 161/1B1A, 160/5,159/6, 159/2B, 158/4,158/2B (பாரதிதாசன் உறுப்பு கல்லூரி பின்புறம்) புதியதாக புறநகர் பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு 19–07–2024 தேதியிட்ட அரசாணை (4டிநிலை) எண்.20 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எஸ் எஸ் & எப் சி) துறையால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிக்கு நகராட்சியின் பங்களிப்பாக ரூ.15.20 கோடியினை பகிர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிக்கு பகிர்வு செய்யப்பட்ட தொகையினை நகராட்சியின் நிதிநிலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள காரணத்தினால் பணியினை முழுமையாக விரைந்து முடித்திட இயலாத நிலையில் உள்ளதனை கருத்தில் கொண்டு அரசின் ஏதேனும் கடன் பகிர்வு திட்டநிதியிலிருந்து வட்டியில்லா கடனாக உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மானம் எண்.228<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு — 1 — இந்நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டும் திட்டப்பணியினை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டில் கொண்டு வரப்படும் நோக்கில் அரசிடமிருந்து உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி கடன் பகிர்வு நிதியினை பெறுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க. எண். 1242/2023/இ1-1 | |
| 17.10.2025 | **பொருள் எண்.38**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.6821.00 இலட்ச மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்வதற்கு அரசாணை எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (எம்ஏ2) துறை நாள் 09.09.2022ல் நாகப்பட்டினம் நகராட்சிக்கு குடிநீர் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மேற்படி திட்டப்பணிக்கு மானியத்தொகைப்போக நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.1262.00 இலட்சத்தினை பகிர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிக்கு பகிர்வு செய்யப்பட்ட தொகையினை நகராட்சியின் நிதிநிலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள காரணத்தினால் பணியினை முழுமையாக விரைந்து முடித்திட இயலாத நிலையில் உள்ளதனை கருத்தில் கொண்டு அரசின் ஏதேனும் கடன் பகிர்வு திட்டநிதியிலிருந்து வட்டியில்லா கடனாக உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு — 1 — இந்நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டும் திட்டப்பணியினை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டில் கொண்டு வரப்படும் நோக்கில் அரசிடமிருந்து உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி கடன் பகிர்வு நிதியினை பெறுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க. எண். 597-2/2022/இ1 | தீர்மானம் எண்.229<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண்.39**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட தோணித்துறை ரோடு பழைய பாலத்தில் உள்ள மின்விளக்குகள் சரிவர எரியாத காரணத்தினால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ள காரணத்தினால் அதனை சீர்செய்வதற்கு பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகத்திடமிருந்து புகார் மனுக்கள் வரப்பெற்றுள்ளன. மேற்படி நாகப்பட்டினம் தோணித்துறை பழைய பாலத்தில் மின்விளக்கு வசதிகள் பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.4.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.230<br>அ.கு,<br>அனுமதி;ககப்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2 | மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | ந.க. எண். 147/2025/இ1 | | | |

// உண்மை நகல் //

(ஒம்) இரா,மாரிமுத்து
நகர்மன்ற தலைவர்